செ.வெ. எண், 93

நாள் : 26.7.2017.

## பத்திரிக்கை செய்தி

மாணவர்கள் தங்களது வேலைவாய்ப்பு பதிவினை வேலைவாய்ப்புத்துறையின் https://tnvelaivaaippu.gov.in என்ற இணையதளம் வாயிலாக வேலைவாய்ப்பு பதிவு செய்து கொள்ளலாம். இவ்விவிணையதளத்தின் மூலம் பதிவு செய்தல், புதுப்பித்தல், கூடுதல் கல்வி பதிவு செய்தல் மற்றும் வேலைவாய்ப்பு அடையாள அட்டை பிரதி எடுத்தல் ஆகியவற்றையும் மேற்கொள்ளலாம். மேலும், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று வேலைவாய்ப்பு பதிவு செய்ய விரும்பும் மாணவ/ மாணவியர்கள், மதிப்பெண் சான்று வழங்கப்படும் பள்ளிகளிலேயே வேலைவாய்ப்பு பதிவு செய்து கொள்ளலாம். எனவே, புதிதாக பதிவு செய்ய விரும்புவோர் குடும்ப அட்டை / ஆதார் அட்டை / பான் அட்டை / மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை / கடவுச் சீட்டு ஆகியவற்றில் ஏதேனும் ஒரு ஆவணத்தை மதிப்பெண் சான்று பெறும்போது எடுத்து வரவேண்டும். பள்ளிகளில் வேலைவாய்ப்பு பதிவுப்பணி நடைபெறும் 15 நாட்களுக்கும் (26.07.2017 முதல் 09.08.2017 முடிய) மதிப்பெண் சான்று வழங்கப்படும் நாளான 26.07.2017 அன்றைய தேதியே பதிவு மூப்பு தேதியாக வழங்கப்படும். மேலும், சி.பி.எஸ்.இ மற்றும் மெட்ரிகுலேசன் வழி பயின்ற மாணவர்களும் தங்களது கல்வித்தகுதியை வேலைவாய்ப்புத்துறையின் https://tnvelaivaaippu.gov.in என்ற இணையதளம் வாயிலாக வேலைவாய்ப்பு பதிவு செய்து கொள்ளலாம் என உதகமண்டல மாவட்ட ஆட்சியர் திருமதி.இன்னொசன்ட் திவ்யா. இ.ஆ.ப அவர்கள் அறிவிக்கின்றார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்

உதகமண்டலம்.